# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 33/மா/2018

ஆணை எண். 36/2018

நாள் : 28/02/2018

திரு J. வேலாயுதம்,
கவுந்தம்பாடி, – முறையீட்டு மனுதாரர்
ஈரோடு மாவட்டம்.

உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி, சேலம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடி, ஓடத்துறை அஞ்சல், எண்.28, போஸ் தெருவைச் சேர்ந்த திரு J. வேலாயுதம் அவர்களின் 03.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2018 அன்று பெறப்பட்டு 33/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடி, ஓடத்துறை அஞ்சல், எண்.28, போஸ் தெருவைச் சேர்ந்த திரு J. வேலாயுதம் என்பவர், சேலம் மாநகராட்சியில் காலஞ்சென்ற லட்சுமி அம்மாள் அவர்களின் 178–A எண்ணிட்ட வீட்டிற்கு சொத்து வரி விதிப்பு திருத்திய அறிவிக்கையினை வாரிசுதாரரான தன்னிடம் வழங்காமல் திரு இளங்கோவன் வசம் வழங்கியது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு அறிவிக்கை சம்பந்தமாக முறையீடு எதுவும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையரையோ அல்லது அம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் சொத்துவரி மேல்முறையீட்டு அமைப்பினையோ அணுகுமாறு மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு J. வேலாயுதம்,
28, போஸ் தெரு,
ஒடக்கரை அஞ்சல், கவுந்தம்பாடி,
ஈரோடு மாவட்டம் – 638 455.

2. மாநகராட்சி ஆணையர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்